**TNTT070025392026**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கோவில்பட்டி**

முன்னிலை: திரு.M.மணிமேகலா,M..A., M.L.,
நீதித்துறை நடுவர் எண். 2
கோவில்பட்டி.

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை

**முதல் நிலை வழக்கு எண்.98/2026**

**கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய குற்ற எண். 280/2026**

| | | |
|---|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>கோவில்பட்டி மேற்கு காவல் நிலையம். | : | குற்றமுறையிடுபவர் |
| –எதிர்– | | |
| மாரிச்சாமி, வயது –40/2026<br>த/பெ. பொன்னுராஜ்<br>3–266, அப்பைநாயுடு பிரிந்தாவனம் நகர்,<br>இளையரசனேந்தல்,<br>கோவில்பட்டி தாலூகா,<br>தூத்துக்குடி மாவட்டம். | : | எதிரி |

இவ்வழக்கானது 15.06.2026–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை வழக்கு எண். 98/2026 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சக்திவேல் அவர்கள் ஆஜராகியும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**உத்தரவு**

**1. அரசு தரப்பில் வழக்கின் சுருக்கம் :–**

இவ்வழக்கின் சாட்சி1 செல்வராணிக்கும் சாட்சி1 ன் கணவரான எதிரி மாரிச்சாமிக்கும் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு கடந்த 9 வருடங்களாக பிரிந்து வாழ்கின்றனர். அது சம்பந்தமாக சாட்சி1 செல்வராணி கோவில்பட்டி JMNo.II நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் எதிரி மாரிச்சாமி மீது DVC No 2/2020 ன் பிரகாரம் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்நிலையில்

09.03.2026ம் தேதி காலை 6.30 மணிக்கு சாட்சி1 இளையரசனேந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகிலுள்ள சாட்சி முருகலட்சுமி வீட்டிற்கு பால் ஊற்ற சென்றபோது அங்கு சென்ற எதிரி மாரிச்சாமி சாட்சி1 செல்வராணியை வழிமறித்து பெண் என்றும் பாராமல் மற்றவர்கள் முகம் சுழிக்கும் வகையில் பொதுயிடத்தில் வைத்து ஏடி தேவடியா முண்ட நீ போட்ட கேஸை ஒழுங்கா வாபஸ் வாங்கு இல்லையினா உன்னிடமிருந்து என் மகனை பறித்து சென்று அவனையும் கொன்றுவிடுவேன் உன்னையும் கொல்லுவேன் என்று மிரட்டி பொது இடத்தில் வைத்து வாதியின் சுடிதார் சால்வையை பிடித்து இழுத்து கிழித்து தேவடியா நீ உயிரோட இருந்ததாதானே, உன் சாவு என் கையில்தான் என்று கொலைமிரட்டி வாதிக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரியின் பிரிவுகள் 126(2), 296(b), 351(3), 76 BNS– ன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆனதும் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230 BNSS–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்தபோது எதிரிக்கு எதிராக பிரிவுகள் 126(2), 296(b), 351(3), 76 BNS–ன் கீழ் குற்றத்திற்கு முகாந்திரம் உள்ளதாலும், மேற்படி குற்றமானது முற்றிலும் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்ககூடிய குற்றம் என்பதாலும் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்த வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இந்த வழக்கை விசாரணைக்காக பிரிவு 232(a) BNSS–ன் கீழ் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

5. இந்த வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் ஆகியவற்றை பிரிவு 232(c) BNSS–ன் படி துத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை

6. இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படுவது பற்றிய அறிவிப்பு மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு பிரிவு 232(d) BNSS–ன் பிரிவின் கீழ் அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரி **16.09.2026** ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

7. எதிரி தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளது என்று கூறினார்.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜூலை 27 –ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MANIMEGALA

Digitally signed by MANIMEGALA
Date: 2026.07.27 20:40:23 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
கோவில்பட்டி.